பதிவு எண் . எ. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 24உ (10—11—67) வெள்ளி

வெளியூர் : ஐப்பசி 25உ (11—11—67) சனி [இதழ் : 123

**காந்தீயத்தின் பேரால்...!**

"காந்தீயத் தத்துவத்தை வாய ளவில் பேசிக்கொண்டு, தங்க ளிடம் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைத் தங்கள் நல னுக்காகப் பதவியிலிருப்போர் பயன்படுத்துகின்றனர் !

"காந்தியார், பதவிக்கு ஆசைப் படவில்லை ! தம்முடைய உற வினர்களுக்குச் சலுகை வேண் டும் எனக் கேட்கவில்லை !"

—மனுபாய் காந்தி
(காந்தியின் பேத்தியார்)

'மீசையில் மண் ஒட்டவில்லை' என்கிறார்—தென் சென்னைத் தேர்தலில் தோற்றுப் பிரபலமாகியிருக்கும் இராஜம் இராமசாமி !

ஒருவகையில் பார்க்கப் போனால் சரிதான் ! கீழே விழுந்து முகமே தரையில் புதையுண்டு கிடக்கும்போது, மண் மீசையில் மட்டுமா ஒட்டியிருக்கும் ?

மாலை நேரங்களில் பேச்சு பதிவாவதில்லை — என்ற தைரியத்தில் பிதற்றுவதுபோல், சொற்பெருக்காற்றும் காங்கிரசின் கடைநிலை மேடைப் பேச்சாளர் யாராவது இப்படிக் கூறியிருந்தால்கூட ஒப்பலாம் ; ஆனால், 'விவரம் தெரிந்தவர்' என்று அறிமுகமாகியிருப்பதுடன், 'தேர்தல் அனுபவமும் உடையவர்' என்று பெயர் பெற்றிருக்கும் தென் சென்னைக் காங்கிரசு வேட்பாளர், 'புதிய வாக்காளர் பட்டியலில் பலருடைய பெயர்கள் நீக்கம் பெற்றிருப்பதனால்தான் எனக்குத் தோல்வி கிடைத்தது' என்பதாக ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பது, தோல்வியினால் அவர் பெற்றிருக்கும் அனுதாபத்தினை, ஒரு அவலமாகத்தான் மாற்றிக் காட்டுகிறது !




பிப்ரவரிக்குப் பின்னர் தயாரித்த பட்டியலில், அதற்கு முன்னர் இருந்த பலரது பெயர்கள் விடுபட்டுப் போய்விட்டனவாம் !

அப்படி இருந்தால், அதற்கு மாற்றம் காண தேர்தல் வேட்பாளருக்கு மட்டுமல்ல — வாக்காளர்களுக்கே முதல் உரிமை, வசதி, வாய்ப்பு இருக்கிறது !

பட்டியல் வெளியாகி பல நாட்கள் அவகாசம் அளிக்கப்படுகிறது – திருத்தங்களைத் தெரிந்துகொள்வதற்காக !

அப்போதெல்லாம் இவர் — ஒரு வேட்பாளராக வரவில்லையென்றாலும்—'எப்படியும் ஒரு வேட்பாளரை நிறுத்துவது' என்று முடிவு செய்திருந்த இவரது காங்கிரசுக் கட்சி, வாக்காளர் பட்டியலுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கலாம்.

பட்டியலில் உள்ள குறைபாட்டினைக் காட்ட தமது பெயரும், குடும்பத்தினர் பெயரும் விடுபட்டதனைச் சுட்டிக்காட்டியிருக்கிறார் ! பின்பு இவர், எப்படி அதனை நிவர்த்தி செய்து கொண்டாரோ—அப்படியே பலர் செய்திருக்கிறார்கள் !

ஆனால் இப்போது வந்து, பலருடைய பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதாக இவர் கூறுவது, 'இத்தனை நாள் ஏன் காத்திருந்தார் ?' என்ற கேள்விக்கு இடம் கொடுக்கிறது !

முடிவு—'பாதகம்' என்றவுடன், பட்டியலில் 'குற்றம்' காண்கிறார் !

'குற்றம் ஆதாரபூர்வமானது'தான் என்றால், ஏன் அதனை அதிகாரபூர்வமாக எழுப்பக்கூடாது ? அனுமதேய அறிக்கை ஏன் ?

நீக்கப்பட்டிருந்த பெயர்கள் இவருக்குத்தான் சாதகமாக இருந்திருக்கும் என்றால், அப்போதே அவருக்கு அக்கறை பிறந்திருக்குமே !

ஆடுவதற்கு முன் கூடத்தைப் பார்த்துக்கொள்வதுதான் நாட்டியக்காரிகளின் வழக்கம் !

'ஆட்டம் அசிங்கமாக இருந்தது' என்ற செய்தி வந்த பின்னர், கூடத்தின் மீது பழி சுமத்திப் பயனில்லை !

—எஸ். ஆர்.

## காதில் விழுந்தது !

**தென் சென்னை வாக்காளர்:**

"தேர்தல் பிரச்சாரத்தின் போது தெருவுக்குத் தெரு வந்து பேசிய அழகேசன், பக்தவத்சலம், கக்கன், பூவராகன் முதலானோர் எங்கே திடீரென்று காணாமல் போய்விட்டனர் ?"

**மற்றொரு வாக்காளர்:**

"கிழக்கு வெளுத்ததற்குப் பின்னர், வேடத்துக்கு என்ன வேலை? நாடகம் முடிந்தவுடன், அதில் வந்த ராஜா-மந்திரிகளைத் தேடிக் கொண்டிருக்கக் கூடாது ! இரவில் ஜொலித்த அரிதாரம், உதயசூரியனின் வெளிச்சத்தில் அசிங்கமாகத் தெரியும் ! எனவே, உடனே அரிதாரத்தைக் கலைத்துவிடுவார்கள் !"

# கட்டாய வாக்குப் பதிவு

## 'தேவையில்லை' என அண்ணா கருத்து

சென்னை, நவ. 10—

அறிஞர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், கேட்கப்பட்ட கேள்விகளும் அண்ணா அளித்த பதில்களும் வருமாறு :—

கேள்வி :—"வாக்காளர்களை, தங்களுடைய வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது பற்றி யோசிப்பீர்களா ?"

அண்ணா :—"இந்த இடைத்தேர்தலில், 60 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் வாக்குகளைப் பதிவு செய்திருப்பதால், கட்டாயத்துக்கே அவசியமில்லை ; சில வட்டங்களில் 80 சதவிகிதத்திற்கு மேல் வாக்குப் பதிவாகியுள்ளது."

கேள்வி :—"நடுத்தர வகுப்பினர் தி.மு.க.-வுக்கு ஆதரவு அளித்திருப்பதால் அவர்களுடைய முன்னேற்றத்திற்காக என்ன செய்ய எண்ணியிருக்கிறீர்கள் ?"

அண்ணா :—"நானும் உங்களைப்போல் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவன்தான் ; வேறு எந்தக் கட்சியையும்விட தி. மு. கழகத்திடமிருந்து அதிக நன்மை ;கிடைக்கும் என்று நடுத்தர வகுப்பினருக்கு நம்பிக்கையிருப்பதையே தேர்தல் முடிவு காட்டுகிறது."

# பொதுத் தேர்தலில் பெற்ற பாடத்தைக் காங்கிரசார் இன்னும் உணரவில்லை!

## இடைத் தேர்தல் தோல்விக்குத் தரங்குறைந்த பேச்சே காரணம்

### செய்தியாளரிடையே அண்ணா விளக்கம்

சென்னை, நவ. 10—

"தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரசின் தோல்விக்கு அதன் தரக் குறைவான பேச்சும்—ஆபாசமான பேச்சும்தான் காரணமாகும் ; இதனால், 10 சதவிகித வாக்குகளைக் காங்கிரசு இழந்துவிட்டது !

"எதிர்க் கட்சியாக உள்ள காங்கிரசு, ஆட்சியினரைக் குறை கூறுவதை நாங்கள் எதிர்க்கவில்லை ; அது அவர்களுடைய உரிமையாகும் ; ஆனால் அதை, வெறுப்பு ஏற்படாதவாறு கூறவேண்டும்.

"தவறுகளைச் சுட்டிக்காட்டுவது, ஆட்சி நல்ல முறையில் நடைபெறுவதற்குத் துணை செய்யும் ; ஆனால் காங்கிரசார், தவறுகளைச் சுட்டிக்காட்டாமல், தனிப்பட்டவர்களைப் பற்றி இழிவாகப் பேசினர் ! தரக்குறைவான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர் !"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், தென் சென்னை இடைத் தேர்தல் பற்றிக் கருத்தறிவிக்கையில், செய்தியாளர்களிடம் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் கூறியதாவது :—

### எல்லாத் தரப்பினரும் கழகத்திற்கு ஆதரவு

"இந்த இடைத் தேர்தலில் கழகத்திற்கு ஆதரவாக எல்லாத தரப்பினரும் வாக்களித்திருக்கிறார்கள் என்பது வாக்கு எண்ணிக்கையிலிருந்து தெரிகிறது.

'சேரிவாழ் மக்களுடைய வாக்குகள்தான கழகத்திற்கு அதிகமாக விழும்' என்று மற்றவர்கள் கூறுகிறார்கள் ; ஆனால் இப்போது கிடைத்த வாக்குகளை வைத்துப் பார்க்கிறபோது, ஒவ்வொரு தொகுதியாக — ஒவ்வொரு வாக்குச் சாவடியாகக் கணக்கெடுத்தால், குடிசைப் பகுதி மக்கள் மட்டுமல்ல—எல்லாத் தரப்பினரும் கழகத்திற்கு வாக்களித்துள்ளனர் என்பது புலனாகிறது.

### எந்த வட்டத்திலும் காங்கிரசுக்கு வெற்றியில்லை

இது மட்டுமல்ல ; எந்த ஒரு வாக்குச் சாவடியிலும், கழக வேட்பாளரைவிடக் காங்கிரசு வேட்பாளர் அதிக வாக்குகளைப் பெறவில்லை !

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் கடந்த பொதுத்தேர்தலில் கழகத்திற்குக் கிடைத்த வாக்குகளைவிட இந்த இடைத் தேர்தலில் அதிக வாக்குகள் கிடைத்துள்ளன !

இதிலிருந்து, மக்கள் கழக ஆட்சி நிறைவேற்றிவரும் திட்டங்களின்மீது தங்களுக்கு உள்ள நம்பிக்கையையும், 'தங்களின் துயர்துடைக்கும் திட்டங்களை இந்த ஆட்சிதான் நிறைவேற்றும்' என்ற நம்பிக்கையையும் தெளிவாக்கிவிட்டார்கள் ! இதுதான், இந்த இடைத் தேர்தலில் கழகம் ஈடு இணையற்ற வெற்றி பெற்றதற்குக் காரணம் என்று நான் கருதுகிறேன்.

### காங்கிரசுக்காரர்களின் நம்பிக்கை தகர்ந்தது !

இந்த இடைத்தேர்தல், மற்றோர் உண்மையையும் வெளிப்படுத்தியிருக்கிறது ; பொதுத் தேர்தலுக்குப் பின், கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதைத் தொடர்ந்து கூட்டணி சிதைந்துவிடும் என்று காங்கிரசுக்காரர்கள் நம்பினர் !

இந்த இடைத் தேர்தல் முடிவு, காங்கிரசாரின் இந்த நம்பிக்கையைத் தகர்த்துவிட்டது !

கழக வேட்பாளர் வெற்றி பெறுவதற்குக் கூட்டணியிலுள்ள எல்லாக் கட்சிகளும் தீவிரமாக உழைத்தன. புதிதாக வலது சாரி கம்யூனிஸ்டுக் கட்சியினரும் ஆதரவு தந்து உழைத்தார்கள் !

கழக வேட்பாளரின் வெற்றிக்கு உழைத்த எல்லாக் கட்சியினருக்கும், கழகத்தின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மக்களின் விழிப்புணர்ச்சி

இது இடைத் தேர்தல் ஆனாலும் பெருவாரியான வாக்குகள் பதிவானதிலிருந்து, 'மக்கள் விழிப்போடு இருக்கிறார்கள்' என்பது புலனாகிறது.

இந்த இடைத்தேர்தலில் அறுபது சதவிகிதத்துக்கும் அதிகமான

(4-ம் பக்கம் பார்க்க)

# மதியழகனுக்கு தென் சென்னை வெற்றிச் செய்தி

சென்னை, நவ 9—

ரோம் நகரில் நடைபெறும் உலக உணவு மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருக்கும் உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு, முரசொலி மாறன் தமது வெற்றிச் செய்தியை, நேற்று நள்ளிரவு 1-30 மணியளவில் தந்தி மூலம் தெரிவித்தார்.

திரு. மதியழகன் சென்னையிலிருந்து புறப்படுவதற்கு முன், 'மாறன் வெற்றிச் செய்தி ரோம் நகருக்கு எட்ட வேண்டும்' என்று கூறிச் சென்றது தெரிந்தது.

# வெல்லம் விற்பனை

## அரசு விளக்கம்

சென்னை, நவ. 9—

"ஒரு தடவையில் 25 குவிண்டாலுக்குக் குறைவாக வெல்லம், நாட்டுச் சர்க்கரை (கண்டசாரி சர்க்கரை) வைத்துக் கொண்டிருக்கும் வியாபாரிகளுக்கு லைசென்சு தேவையில்லை ; அதற்கு மேல் வைத்திருப்பதற்குத்தான் லைசென்சு வேண்டும்"

என்று, சிவில் சப்ளை கமிஷனர் விடுத்துள்ள ஓர் உத்தரவு கூறுகிறது.

"25 குவிண்டாலுக்கு மேல் பெர்மிட் இன்றி எவருக்கும் வெல்லம் விற்கக்கூடாது" என்றும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 24 (10—11—67) வெள்ளி

# வரலாற்றுச் சிறப்புடைய வெற்றி!

**“இந்த இடைத் தேர்தல் சாதாரண இடைத் தேர்தல் அல்ல. இந்தியை எதிர்ப்பதில் தமிழகம் தளராத உறுதியோடு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடைத் தேர்தலாகும்.”**

இந்த இடைத் தேர்தலின் குறிக்கோள் எது என்பதை, மேற்குறிப்பிட்டுள்ளவாறு, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தார்கள். அக்குறிக்கோளை தாங்கள் முழு அளவில் ஏற்றுக்கொண்டுவிட்டதை, கழக வேட்பாளர் முரசொலி மாறன் அவர்களை வெற்றி பெறச் செய்திருப்பதன் வாயிலாகத் தென் சென்னை வாக்காளர்கள் உறுதி செய்துள்ளனர்.

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில், இந்தஇடைத் தேர்தலில்தான் முதன்முதலாகக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது என்பதில்லை; சென்ற இரண்டு பொதுத் தேர்தல்களிலும், கழகம் தான் தொடர்ந்து வெற்றி பெற்றிருக்கிறது.

மூன்றாவது பொதுத் தேர்தலின்பொழுது நாஞ்சில் கி. மனோகரன் இத்தொகுதியிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த இடைத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளராக நின்று தோல்வியைத் தழுவிக்கொண்ட இதே சி.ஆர். இராமசாமி அவர்கள்தான், அப்பொழுதும் போட்டியிட்டுத் தோல்வியைத் தேடிக்கொண்டார்.

அடுத்து நான்காவது பொதுத் தேர்தலில், அறிஞர் அண்ணா அவர்கள் காங்கிரசு வேட்பாளராக நின்ற தொழிற்சங்கத் தலைவர் குருமூர்த்தி அவர்களை இத்தொகுதியில் வீழ்த்தினார். இப்பொழுது நடந்த இடைத் தேர்தலில், முரசொலி மாறன் அவர்களிடம் காங்கிரசு வேட்பாளரான சி.ஆர். இராமசாமி இரண்டாம் முறையாகத் தோற்றிருக்கின்றார்.

மூன்றாவது பொதுத் தேர்தலில் இத்தொகுதியில், அறுபதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரசு வேட்பாளரைக் கழகம் தோற்கடித்திருக்கிறது. நான்காவது பொதுத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளர் பெற்றதைவிட ஏறத்தாழ எண்பத்திரண்டாயிரம் வாக்குகளைக் கூடுதலாகப் பெற்று அண்ணா அவர்கள் வெற்றி பெற்றார். இந்த இடைத் தேர்தலிலோ, கழக வேட்பாளரான முரசொலி மாறன், ஏறத்தாழ ஓர் இலட்சத்து ஆறாயிரம் வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றுக் காங்கிரசு வேட்பாளரைத் தோற்கடித்துள்ளார்.

இதை நாம் குறிப்பிடுவதற்குக் காரணம் இருக்கிறது; அதாவது, ‘இத்தொகுதி வாக்காளர்களின் ஆதரவு கழகத்திற்கு மேலும் மேலும் பெருகிவந்திருக்கிறது’ என்ற உண்மையை வலியுறுத்துவதற்கேயாகும்.

சென்ற பொதுத் தேர்தலைவிட இந்த இடைத் தேர்தலில், காங்கிரசுக் கட்சியின் பிரச்சாரம் பல மடங்கு கூடுதலாக இருந்தது. ‘மக்கள் தலைவர்’ எனக் காங்கிரசுக் கட்சியினரிடை புகழப்பட்டு வருகின்ற அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர், காங்கிரசு வேட்பாளரை ஆதரித்துப் பல கூட்டங்களில் பேசினார்.

தம்மியல்புப்படியும், தாம் பெற்றுள்ள பயிற்சிக்கு ஏற்பவும், கழகத்தின் மீது வழக்கமாக வீசிவரும் வசைமொழிகளை இப்பொழுதும் அந்தப் பெரியவர் வீசத்தான் செய்தார். ஏழைகளுக்கு உணவு–உடை–உறையுள்–கல்வி ஆகியவற்றைத் தேடித்தருவது தான் தமது இலட்சியம் என்றும், அவற்றை ஏழை மக்கள் பெற்று மகிழ்ச்சியாக வாழ்கின்றவரையில் தாம் ஓய்ந்திருக்கப்போவதில்லை என்றும், வழக்கமாகப் பாடிவரும் ‘அரசியல் தெம்மாங்கை’ இப்பொழுதும் காங்கிரசுப் பெரியவர் ஒவ்வொரு கூட்டத்திலும் பாடி வந்தார்!

இந்த இடைத் தேர்தலுக்காக என்றே தேசிய மாணவர் ‘பெரும் படை’ ஒன்றைத் திரட்டி, அம்மாணவர்கள் பெயரால் ஒரு ‘மாபெரும் மாநாட்’டை அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் கூட்டினார். அம்மாணவர் மாநாட்டில் பெரிதும், காமராசரை ஒத்த காங்கிரசுத் தேய்ந்த முகங்கள்தான் பங்கு கொண்டிருந்தன!

பெயர்தான் ‘தேசிய மாணவர்’ மாநாடு. மாநாட்டில் பங்கு கொண்டவர்களோ, சென்ற பொதுத் தேர்தலில் வாக்காளர்களால் உருக்குலைக்கப்பட்டுவிட்ட காங்கிரசு ‘மூஞ்சி’கள்!

ஏழை மக்களுக்கு உணவும் உடையும், குடியிருப்பும் கல்வியும் பெற்றுத்தருவதற்காகவே அரசியலில் தாம் உலவிவருவதாகப் பீத்திக்கொள்ளும் இந்தப் பெரியவர், சென்ற பொதுத் தேர்தலின் போது, காங்கிரசு வேட்பாளராக ஒரு தொழிற்சங்கத் தலைவரை நிறுத்தியதற்கு மாறாக இந்த இடைத் தேர்தலில், ‘முதலாளிகளுக்குள் முதலாளி’ எனக் கருதப்படுகின்ற இராமசாமி அவர்களை ஏன் காங்கிரசு வேட்பாளராக நிற்கவைத்தார் என்பது பற்றித் தென் சென்னை வாக்காளர்கள் சிந்திக்காமலா இருப்பர்? சிந்திக்கத்தான் செய்தனர்; ‘ஏழை மக்கள் நல்வாழ்வு பெறுவது பற்றி இந்தப் பெரியவர் கூறுவதெல்லாம் வெறும் பொய்யுரை’ எனப் புரிந்துகொண்டனர் என்பதை, காங்கிரசு வேட்பாளரை மண்ணைக் கவ்வச் செய்திருப்பதன் மூலம் தென் சென்னை வாக்காளர்கள் வெளிப்படுத்திவிட்டனர்.

இந்த இடைத் தேர்தலில், சொந்தத் தகராறு காரணமாகத் தன் இரண்டு கால்களில் ஒன்றைப் பறிகொடுத்துவிட்டவரின் புகைப்படத்தைப் போட்டு, வாக்காளர்களிடம் கழக அரசைக் களங்கப்படுத்தியும் காட்டினர் காங்கிரசுக் கட்சியினர்! காங்கிரசுப் பெரியவர், இதற்கு ஊக்கமளித்தார்! ‘நொண்டி’யைப் படம் பிடித்துக்காட்டி, காங்கிரசு ‘சண்டிகள்’ செய்த பொய்ப் பிரசாரம், வாக்காளர்களிடம் பெற்றுத்தர வேண்டிய வெகுமதியை, காங்கிரசுக் கட்சிக்குப் பெற்றுத்தந்துவிட்டது! ‘பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்’ என்ற பாடத்தை, இனிமேலா இந்தக் காங்கிரசுப் பெரியவர் படித்துக்கொள்ளப் போகிறார்?

பரும்பு, புளி, வெல்லம் ஆகிய பண்டங்களின் விலை கொஞ்சம் கூடியிருப்பதைக் காட்டும் சுவரொட்டிகளை வெளியிட்டு, கழகத்தைத் தோற்கடிக்க இந்தக் காங்கிரசுப் பெரியவர் முயன்றார். இந்த விலையேற்றத்துக்கான உண்மைக் காரணத்தைத் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கின்ற வாக்காளர்கள், சுவரொட்டிகளைக் கண்டு ஏமாந்துவிடவில்லை! கழக வேட்பாளர் வெற்றிக்கே வாக்கு அளித்துள்ளனர்!

சட்டமன்ற எதிர்க கட்சித் தலைவர், “தென் சென்னை இடைத் தேர்தலில் ஓட்டுப் போட வருவதற்குப் பெண்கள் பயப்படுகின்றனர்; வெளியே வந்தால், ‘என்ன ஆகுமோ--ஏது ஆகுமோ’ என்று அஞ்சுகிறார்கள்; இதுபற்றித் தலைமைத் தேர்தல் கமிஷனருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்; ‘தேர்தலின்போது நீங்கள் இங்கு இருக்க வேண்டும்: யார் ஜெயித்தாலும் தேர்தல் ஒழுங்காக நடக்க வேண்டும்’ என்று கடிதத்தில் கேட்டிருக்கிறேன்” என, தாம் பேசிய தேர்தல் கூட்டம் ஒன்றில் அறிவித்தார். ஆனால், ‘எதிர்க் கட்சித் தலைவரின் கூற்று வெறும் சற்பனை; அடிப்படை இல்லாத பொய்’ என்பதை, இத்தேர்தலில் பெண்கள் ‘கியூ’வில் நின்று வாக்களித்திருப்பது மெய்ப்பித்துவிட்டது!

வாக்குப் பதிவு நாளன்றும், வாக்கு எண்ணிக்கை நாளன்றும் தேர்தல் கமிஷனர் இங்குதான் இருந்தார்; பல வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்குப் பதிவுகளையும் நேரில் பார்த்திருக்கின்றார்; பின்னர் தம் கருத்தையும் வெளியிட்டிருக்கின்றார்;—“தேர்தல் மிக நன்றாகவும் வெற்றிகரமாகவும் நடந்திருக்கிறது; தேர்தல் மிகவும் சுமூகமாகவும் அமைதியாகவும் நடந்துள்ளது; ‘புகார்’ என்று சொல்லக்கூடிய எதுவும் இல்லை” எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

கழகம் பெற்றுள்ள இந்த இடைத் தேர்தல் வெற்றிக்கு, மாசு கற்பிக்க முடியாத அளவுக்குத் தேர்தல் அதிகாரியின் நற்சான்று அமைந்திருக்கிறது. எனவே, ‘கழகம் பெற்றுள்ள தேர்தல் வெற்றி, நேர்மையான முறையில் பெறப்பட்டதே ஆகும்’ என காங்கிரசுப் பெரியவரும், மீஞ்சூர் முதியவரும், தொண்டர் குழாம்களும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்த இடைத் தேர்தலில் கழகம் பெற்றுள்ள வெற்றி, ‘வரலாற்றுச் சிறப்புடையது’ என்பதை மறப்பதற்கில்லை!

இந்த இடைத் தேர்தலில் கழகத்துக்கு வெற்றி தேடித் தந்த தென் சென்னை வாக்காளர்களுக்கும், வெற்றி வாகை சூடிய முரசொலி மாறன் அவர்களுக்கும் நமது இதயம்கலந்த பாராட்டும், வாழ்த்தும்!

—கா. க.

# காமராசரை வென்றார் அண்ணா!

## காங்கிரசார் 'போட்ட கணக்குப் பொய்த்தது!

## ஏழை -- நடுத்தர மக்கள் அனைவரும் கழகத்தின் பக்கமே நிற்கின்றனர்!

### தென் சென்னைத் தேர்தல் முடிவு -- ‘மெயில்’ ஏட்டின் மதிப்பீடு

சென்னை, நவ. 8—

தென் சென்னைத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றி கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டு, தேர்தல் முடிவை அறிவித்திருக்கும் சென்னை ‘மெயில்’ ஆங்கில நாளிதழ், இத்தேர்தல் முடிவினைக் குறித்துத் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:—

சென்ற பொதுத்தேர்தலைக் காட்டிலும் இந்த இடைத் தேர்தலில் குறைந்த அளவு வாக்குகளே பதிவானபோதிலும், தி. மு. கழகம் தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டதன் மூலம் தன் நிலையை உயர்த்திக்கொண்டது!

தி. மு. க. வெற்றி பெற்றது வியப்பளிக்கக்கூடிய செய்தியன்று; தி. மு. க. வெற்றியில் யாருக்குமே ஐயப்பாடு ஏற்பட்டதில்லை!

அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றதும், படித்த வாக்காளர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதுமான தென் சென்னைத் தொகுதியில் உள்ள நடுத்தர மக்கள், சென்ற பொதுத் தேர்தலில் தி. மு கழகத்திடம் காட்டிய ஆதரவை, இந்த முறை காங்கிரசுப் பக்கம் திருப்பிவிடுவர் என்று எதிர்பார்க்கப்பட்டதைப் பொய்யாக்கிவிட்டனர்!

**விலைவாசி உயர்ந்துவிட்டதாகவும், சட்டம் – ஒழுங்கு கெட்டுவிட்டதாகவும் கூறி காங்கிரசுத் தலைவர் காமராசரால் முடுக்கிவிடப்பட்ட பிரசாரமும் தோல்வி கண்டது!**

“மாறனின் வெற்றி, காமராசர் மீது, அறிஞர் அண்ணா கொண்ட வெற்றியேயாகும்” என்று, தி.மு.க. வட்டாரம் பெருமை கொள்கிறது.

“இந்த இடைத்தேர்தல், எனக்கும் – காமராசருக்குமிடையே நடக்கும் பலப் பரீட்சையாகும்” என்று திரு. அண்ணாதுரை, ஒரு தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

**இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகளைப் பகுத்தாராய்ந்து பார்த்தால், குடிசைவாழ் மக்கள்—தொழிலாளர் உள்ளிட்ட ஏழை எளிய மக்கள், ஆளுங்கட்சியின் (தி.மு.க.) பக்கமே ஏகோபித்து நிற்கின்றனர் என்பது தெளிவாகிறது; மேலும், ‘நடுத்தர வர்க்க மக்களும் தங்கள் நிலையை மாற்றிக்கொள்ளக் கூடிய அவசியம் எதுவும் ஏற்படவில்லை’ என்பது தெளிவாகியுள்ளது.**

**ஆட்சியில் உள்ள கட்சிக்கும் – பொதுமக்களுக்கும், ஏழுமாத தி.மு க. ஆட்சியைப் பற்றி மதிப்பீடு செய்வதற்கு இந்த இடைத்தேர்தல் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது.”**

# அடிப்படை உரிமைகளுக்கு உலை!

## ‘கட்சி நலனுக்காக அரசியல் சட்டத்தைத் திருத்துவதா?’--முன்னாள் நீதிபதி கண்டனம்

சென்னை, நவ. 10—

“சுதந்தரம் பெற்ற 20 ஆண்டுக்குள் அரசியல் சட்டம் 21 தடவை திருத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு திருத்தமும் பதவியில் உள்ள கட்சியின் கொள்கையைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவே கொண்டு வரப்பட்டிருக்கிறது; ஆனால், அரசியல் சட்டத்தின் கொள்கையை பலப்படுத்துவதற்காக அந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்படவில்லை. இந்தத் திருத்தங்களின் விளைவாக, சட்டத்தின் ஆட்சி அலட்சியம் செய்யப்பட்டிருக்கிறது; அரசியல் அமைப்புக்குச் சர்வாதிகாரப் போக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது”

என்று, இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கே. சுப்பா ராவ் குறிப்பிட்டிருக்கிறார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

“இந்தியச் சுதந்தரத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, ஆட்சியில் இருந்த எவரும் நீதியை மதித்து நடந்தது கிடையாது என்பது தெளிவாகிறது.

“நம்முடைய அரசியல் சட்டத்தில் பலவகையான கொள்கைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. ‘அனைவருக்கும் சம உரிமை கொடுக்கப்பட வேண்டும்—பாகுபாடு கூடாது’ என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், அரசியல் சட்டத்தை அடிக்கடி திருத்துவதன் காரணமாகப் பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன!

“அரசியல் சட்டத் திருத்தங்களின் காரணமாக நீதித் துறையில் பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறது!

“தங்கள் சொந்த விருப்பத்துக்காக அரசியல் சட்டத்தை மாற்றக்கூடாது; அடிப்படை உரிமைகள் பறிபோகாமல் சட்டம் அமைக்கப்பட வேண்டும்.

“மக்கள் விரும்பினாலன்றி அரசியல் சட்டத்தை மாற்றக் கூடாது.

“அரசியல் அமைப்பின் நோக்கம் -- அதாவது, நல்வாழ்வு—சமத்துவம்—சுதந்தரம் — சமூக நீதி ஆகியவை ஒவ்வொரு குடிமகனின் உடலிலும் உள்ளத்திலும் உணர்ச்சியிலும் இடம் பெற வேண்டும்.”

# லோகியா நினைவாக சோஷலிசக் கல்லூரி

போபால், நவ. 10—

மத்தியப் பிரதேசத்தில் ஜபல்பூர் என்னும் இடத்தில் சோசலிசக் கல்லூரி திறக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

காலஞ்சென்ற டாக்டர் லோகியாவின் நினைவாக ரூ 10 இலட்சம் செலவில் இக்கல்லூரி அமைக்கப்படுகிறது.

இந்த நினைவுச் சின்னம் நிறுவுவதற்காக இலவசமாக நிலம் வழங்க மத்தியப் பிரதேச அரசு முன்வந்துள்ளது.

அக்டோபர் 20-ம் நாள் முதல் நவம்பர் 3-ம் நாள் வரை லோகியா நினைவு நாள் கொண்டாடியபோது ஓரளவு நிதி திரட்டப்பட்டது.

# சுதந்தரம் பெற்று இருபது ஆண்டுகள் ஆகியும் வீட்டுப் பிரச்சினை தீரவில்லையே!

## தமிழகத்துக்கு ஒதுக்கிய நிதியைத் தருவதில் தாமதம் ஏன்?

### வீட்டு--வசதித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் அண்ணு உரை

சென்னை, நவ. 10—

" 'மாநிலங்கள்தான் வீட்டு வசதித் திட்டங்கள் வகுக்க வேண்டும்' என்று மத்திய அமைச்சர்கள் சொல்லிவிடலாம் ; ஆனல், மாநிலங்களுக்கு உள்ள சொற்ப நிதி வசதியைக்கொண்டு இதற்குப் பெருந்தொகை செலவிட இயலாது !

"நிதி வசதிக்கு மட்டுமன்றி மாதிரி அமைப்புக்கும் மாநிலங்கள், மத்திய அரசையே பெரிதும் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது !

" தமிழ்நாடு, மத்திய அரசு குறிப்பிட்டதில் கணிசமான பகுதியை நிறைவேற்றிவிட்டது ; இங்கு நிறைவேற்றப்பட்டுள்ள வீட்டு வசதித் திட்டங்களை மத்திய அமைச்சர்கள் பார்வையிட்டு, செலவை எவ்விதம் குறைக்கலாம் என்பது குறித்து யோசனை கூறுமாறு கேட்டுக் கோள்கிறேன்.

" தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை வழங்கத் தாமதிப்பதால், வீடுகளும் திட்டங்களும் அரைகுறையாக நிற்கின்றன ! தமிழக அரசு, மக்களுக்கு வீட்டு வசதி செய்து தருவதாக அளித்த வாக்குறுதியை விரைவில் நிறைவேற்றக்கூடியவாறு மத்திய அமைச்சர் தாராளமாக உதவுவார் என எதிர்பார்க்கிறேன் "

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், மாநிலங்களின் வீட்டு வசதித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இந்த மாநாடு சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. மத்திய அமைச்சர் திரு. ஜெகநாதராவ் தலைமைவகித்தார்.

தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

மாநாட்டைத் துவக்கிவைத்து அண்ணு அவர்கள் உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நீண்ட பல ஆண்டுகளாவே இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டு வந்துள்ளது ; ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளோமென்றுலும், வீட்டு வசதித் தேவை மிக அதிகமாக வளர்ந்து சிக்கலடைந்துள்ளது ; எனவே, இன்றுபோல இன்னும் கூடி நாம் பேசிடுவது அவசியம். தோன்றுகிற புதிய கருத்துக்களை ஒருசேரக் குவித்துப் பார்க்கவும், புதிய நிதி ஆதாரங்களைத் தேடிட வழிகாணவும் இத்தகைய மாநாடுகள் பயன்படும்.

எந்த அளவுக்கு வெற்றிகரமாக இதைச் செயல்படுத்த முடியுமென்பதை நாம் ஆராய வேண்டும். இதுவரை நாம் ஆற்றிய பணி, நமக்கே திருப்தியூட்டுவதாக இல்லை. எனவே, வீடுகள் கட்டும் பணியில் நாம் இதுவரை கையாண்ட பழைய 'பாணி'களைக் கைவிட்டு, புதிய நுணுக்கங்களைக் கையாளுவது குறித்து ஆராய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

வீடுகள் கட்டுவதை விரைவாகச் செய்வதெப்படி என்பது குறித்தும் நாம் திட்டமிட வேண்டும்.

சுதந்தரமடைந்து 20 ஆண்டுகள் ஆன பின்பும் நம்மால் வீட்டு வசதிப் பிரச்சினையை ஓரளவாகிலும் தீர்க்க இயலவில்லையென்ருல், வெளி உலகத்தின் கண்ணில் நம் மதிப்பு நேர்த்தியானதாக இருக்குமா ?

சேரிவாழ் மக்களாயினும், நகர்ப் பகுதிகளில் மக்கள் நெருக்கமான இடங்களில் வாழுபவர்களானுலும், அவர்கள் அனைவரும் குடியிருப்புக்கு ஓர் இடம் வேண்டுமென்றே குரலெழுப்பி வருகிருர்கள்.

குடியிருப்பு வசதி செய்வது என்பதை நாம் மூன்று வகையாகப் பிரித்துக்கொள்ளலாம் ; வடிவமைப்பு — விரைவில் கட்டி முடிப்பது— வீடு கட்டும் திட்டங்களுக்கான நிதி வசதிகளைத் தேடுதல் — என இம்மூன்று வகைகளாகப் பிரித்து இதனை ஆராயலாம்.

'வீட்டு வசதித் திட்டங்களா ? அவற்றை மாநில அரசுகள் வகுத்து நிறைவேற்றும்' என்று மத்திய அரசு எளிதில் சொல்லிவிடும் ; ஆனல், மாநில அரசுகளுக்கு உள்ள மிகக் குறைந்த நிதி வசதிகளை வைத்துக் கொண்டு இப்பெரிய பணிக்கு நிதி ஒதுக்கிடுவதென்பது இயலாது. வடிவமைப்புகள் தயாரிப்பதற்கே மத்திய உதவியை நாட வேண்டியிருக்கிறது

இதுவரை மத்திய அரசு அளித்துள்ள மானிய உதவி அனைத்தையும் பயன்படுத்திவிட்டோம் ; மேலும் ஏராளமாக நிதி தேவைப்படுகிறது ; இதை எப்படிப் பெறுவதென்பதற்கு இம்மாநாடு வழி கண்டாக வேண்டும்.

பொதுமக்களிடையே கடன்களை எழுப்புவதா? அல்லது நல்ல நிலையில் உள்ள பாங்கிகள் தாராளமாகக் கடன்கள் வழங்கி- வேண்டுமென்று அவற்றைக் கேட்டுக்கொள்ளலாமா? —என்பதையெல்லாம் இம்மாநாடு ஆலோசித்துக் கூறிட வேண்டும்.

இப்போது சாதாரணமாக வீடு ஒன்றுக்கு ரூ. 25 ஆயிரம் செலவாகிறது ; மிகக் குறைந்த செலவில் செய்வதாகச் சொல்லும் வீடும் ரூ. 11 ஆயிரம் ஆகிறதென்கிருர்கள் ; இதைக் கணிசமாகக் குறைத்தாக வேண்டும்.

கொத்தனாரானுலும்— சித்தாளே ஆயினும் நான் அனைவருக்கும் இம்மாநாட்டின்மூலம் வேண்டுகோள் விடுக்கிறேன—எப்படி செலவைக் குறைப்பது என்பது பற்றி யோசனை கூறுங்கள்.

மக்களின் சராசரி வருமானம் மிகக் குறைவாக உள்ள ஒரு நாட்டில் குடியிருப்புக்கு இத்தனை அதிகம் செலவாகிறதென்ருல், மக்களால் எப்படித் தாங்க முடியும் ?—இதைச் சிந்தித்து வழி கண்டாக வேண்டும்."

★

## கிராம மக்கள்மீது கவனமில்லை!

### செ. மாதவன் உரை

சென்னை, நவ. 8—

தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் செ. மாதவன் இம்மாநாட்டில் வரவேற்புரையாற்றுகையில் கூறியதாவது :—

" மனித வாழ்க்கையில் உணவு—உடைக்கு அடுத்தபடி உறையுள் முக்கிய இடம் வகிக்கிறது.

தொழிலாளருக்கு வீட்டு வசதி செய்யும் பணியில் ஓர் ஆரம்பம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது இன்னும் ஏராளமான தொழிலாளருக்கு வீட்டு வசதி செய்து தரப்படாமல் இருக்கிறது.

இப்பணிக்கென்று மத்திய அரசு இதுவரை ஒதுக்கிய மானியம் அனைத்தையும் தமிழக அரசு பயன்படுத்தியுள்ளது.

நகரங்களில் மக்கள் தொகை அதிகரிப்பினல் இப்பிரச்சினை நெருக்கடி கட்டத்தை அடைந்துள்ளது.

கிராமப்புற வீட்டு வசதி என்று பார்த்தால் இதில் இதுவரை கவனமே செலுத்தப்படவில்லை. வீட்டு வசதிப் பணிக்கு போதுமான மத்திய நிதி, மானிய உதவிகள் கிடைத்திட மத்திய அமைச்சர் வழிவகுப்பார் என்று நம்புகிறேன்.

மலிவாக வீடுகளைக் கட்டுவதுடன் விரைவாகவும் கட்டவேண்டும்."

## இந்தி எதிர்ப்பில் மாண்டவர்களுக்கு நினைவுச் சின்னம்

### ஆரணி நகராட்சி ஏற்பாடு

ஆரணி, நவ. 9—

ஆரணி நகராட்சி மன்றக் கூட்டத்தில், 1965 பிப்ரவரியில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஆரணியில் உயிரிழந்தவர்களுக்கு ரூ. 4000 செலவில் நினைவுச் சின்னம் அமைக்கப்படுவதற்கான தீர்மானம் நிறைவேறியது.

இக்கூட்டம் நகராட்சித் தலைவர் நரசிம்மன் தலைமையில் நடந்தது.

## இந்திராவுக்கு எதிராகக் காமராசர்

### இருவரையும் வீழ்த்த மொரார்ஜி திட்டம்

### கோஷ்டிப் பூசலால் காங்கிரசு சீர்குலையும் பரிதாபம்!

புதுடில்லி, நவ. 10—

16 ஆண்டுகளுக்குப் பின்னர் இம்முறை காங்கிரசுத் தலைமைப் பதவிக்குப் போட்டி இருக்கலாம் எனத் தெரிகிறது.

காங்கிரசு மேலிடத் தலைவர்கள், ஒரு பொதுவான தலைவரை ஒப்புக்கொண்டபோதிலும், கட்சியின் இரண்டாவது அணியினர் அதை எதிர்ப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

தலைமை அமைச்சரையும் அவரது வேட்பாளரையும் எதிர்க்கும்படி காமராசரை கம்யூனிஸ்டுகளும், தோல்வியடைந்த தலைவர்கள் அடங்கிய 'சிண்டிகேட்'டும் வற்புறுத்தக்கூடும்.

இந்திரா, காமராசர் ஆகிய இருவரையும் வீழ்த்தக் காங்கிரசில் மொரார்ஜி கோஷ்டியும், வெளியே 'கிரந்தி தளமும்' முயற்சி செய்யும் !

இரு தலைவர்கள் காங்கிரசுத் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டால், காங்கிரசுக் கட்சி பலவீனமடையும் ! காங்கிரசுக் கட்சி பலவீனமடைவதை பாரதீய கிரந்தி தளம் எதிர்பார்க்கிறது ! பலவீனமடைந்த பின்னரே அதனுடன் கூட்டுச் சேர பாரதீய கிரந்தி தளம் முன்வரும் ! இதைத்தான் மேற்கத்திய நாடுகளும், இந்தியத் தொழிலதிபர்களும் விரும்புகிருர்கள் !

காங்கிரசுத் தலைவர் தேர்தல் நடந்த பின்னர், நாடாளுமன்றத்தில் இந்திரா காந்தியின் பெரும்பான்மை பலத்துக்கு உலைவைப்பதே, பாரதீய கிரந்தி தளத்தின் நோக்கமாகும்.

இந்திராவோ, நான்காவது நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதிதாக இடைத் தேர்தல் நடத்த உத்தரவிடச் செய்வாரே தவிர, வேறு கட்சியுடன் கூட்டுச் சேரமாட்டார் என்றும், நாடாளுமன்ற இடைத் தேர்தலுடன் அரியானு, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும் இடைத் தேர்தல் நடக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

# தலைவர்களைக் கண்டு மரியாதை செலுத்தினர் வெற்றி வீரர் மாறன்!

சென்னை, நவ. 8—

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற முரசொலி மாறன், இன்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களைச் சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தலில் தமது வெற்றியை உறுதிசெய்யும் தேர்தல் அதிகாரியின் சான்றிதழைத் தந்துவிட்டு, அவரது கால்களைத் தொட்டுக் கும்பிட்டார். இலட்சம் வாக்குகளில் வெற்றிபெற்ற தம் தம்பியைக் கண்டதும், அண்ணு அவர்கள், மகிழ்ச்சியால் பூரித்தார். அந்தச் சமயம் காட்டூர் இராமையா தந்த திருக்குறளை வாங்கி அண்ணு அவர்கள், 'தம்பி மாறன் எம்.பி.-க்கு அன்பளிப்பு' என்று எழுதி அளித்தார்.

## இராஜாஜி சந்திப்பு

பின்னர், இராஜாஜி அவர்களை மாறன் சந்தித்து மலர்மாலை அணிவித்து—மரியாதை தெரிவித்து—தேர்தல் சான்றிதழை அவரிடம் தந்து—அவருடைய பாதமலர்களைத் தொட்டு வணங்கினர்.

மாறனுக்கு இராஜாஜி அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து 'அட்சதை' தூவினர்.

பின்னர் மாறனைப் பார்த்து, "உங்களுக்குப் பாராட்டு தெரிவிப்பதோடு தி. மு கழகத் தொண்டர்களுக்கும், மற்றக் கட்சித் தொண்டர்களுக்கும் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும் ; குறைவான சதவிகிதம்தான் ஓட்டுப் பதிவான போதிலும் உற்சாகமாக உழைத்து, சென்ற தேர்தலைவிட அதிகமான ஓட்டுகள் வாங்க உழைத்த எல்லோருக்கும் எனது பாராட்டுதல்கள்" என்ருர்.

## காயிதே மில்லத்

முஸ்லிம் பெருமக்களின் தலைவரும் முதுபெரும் அரசியல்வாதியுமான காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்களுக்கு மாறன், தமது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்.

## எம். ஜி. ஆர். சந்திப்பு

இந்த இடைத் தேர்தலில் முக்கிய பங்கெடுத்துப் பணியாற்றிய புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மாறன் தமது மரியாதையைத் தெரிவிக்கும் வகையில் விஜயா ஸ்டுடியோவிற்குச் சென்று மாலை அணிவித்தார்.

எம். ஜி. ஆர். அவர்கள் அன்புடனும் ஆதுரத்துடனும் மாறனைக் கட்டித் தழுவி நெற்றியில் முத்தமிட்டுப் பாராட்டினர்.

## ஆதித்தனர் சந்திப்பு

சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனருக்கும் மாறன் மலர் மாலை அணிவித்து மரியாதை தெரிவித்தார் ; உடனே ஆதித்தனர், மாறனுக்கு இன்னொரு மாலை அணிவித்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

## காங்கிரசுக் கட்சியின் கண்துடைப்புத் திட்டம் !

"காங்கிரசின் பத்து அம்சத் திட்டம் வெறும் கண்துடைப்பே அன்றி வேறு அல்ல" என்று குசராத் பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் சோடாபாய், யூ. பி. எஸ். செய்தியாளரிடம் கூறியுள்ளார்.

"காங்கிரசின் திட்டம், மேம்பாட்டுத் திட்டமே அல்ல" என்று அவர் சொன்னர்.

# 'இந்தி தேசிய மொழியா? ஆட்சி மொழியா?

## 'வரப்போகும் மசோதாவும் நேருவின் வாக்குறுதியைக் காப்பாற்ருது'

### 'இந்தியை எதிர்ப்பது தமிழகம் மட்டுமே என்பது விதண்டாவாதம்'--பிராங்க் அந்தோணியின் விளக்கம்

" அரசியல் சட்ட நிர்ணய சபை கூடி முடிவெடுத்தபோது, அது, இந்தியைத் 'தேசிய மொழி' என்று அழைக்கவில்லை—தகுதியையும் தரவில்லை ; 'ஆட்சி மொழி' என்றே குறிப்பிட்டார்கள்; ஆனல் இப்போது உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்கள், இந்தியை, 'ராஜ்ய பாஷை'யாக—அதாவது ஆட்சிமொழியாக மாற்ற முனைகின்றன ; 'இந்திதான் ஆட்சி மொழி' என்ருல், இந்தி மொழி பேசாதோர் இரண்டாந்தரக் குடிமக்கள்தான் "

என்று, ஆங்கிலோ— இந்தியப் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிராங் அந்தோணி, பெங்களூரில், சுட்டிக்காட்டி கூறியிருக்கிருர். இத்தொடர்பில் அவர் மேலும் பேசியிருப்பதாவது :—

' ஆட்சி மொழிச் சட்டத் திருத்தம் பற்றி வர இருக்கும் மசோதாவும் நேருவின் வாக்குறுதியைக் காப்பாற்ருது ; 'சில பல துறைகளுக்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படும்' என்ற உபசார வார்த்தைகள்தான் இருக்கும் ; உண்மையில் அது, நேருவின் வாக்குறுதியை மையமாகக் கொண்டிருக்காது ; எனவே, நடைபெறவிக்கும் நாடாளுமன்றக் கூட்டம், ஆட்சி மொழிப் பிரச்சினையில் நிறைய சிக்கல்கலகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

" இந்தி மட்டுமே ஆட்சிமொழியாவதை, 'தமிழகம் மட்டுமே எதிர்க்கிறது ; மற்ற எல்லா மாநிலங்களும் ஏற்கின்றன' என்று கூறுவது சரியல்ல ; இது ஒரு தவருன வாதமாகும்."

## மணி---சாமி குழுவினர்

### கலை நிகழ்ச்சிகள்

நவ. 11 : மதுரை ; 12 : வெள்ளி பத்திரி ; 13 : விருதுநகர் ; 14 : திருச்சி ; 15, 16, 17 : அந்தியூர் (ஈரோடு வட்டம்) ; 18, 19 : நாகர் கோயில்.

# கட்சி சார்பற்ற முறையில் நகராட்சித் தேர்தல்

## அண்ணாவின் யோசனையைக் காங்கிரசு ஏற்குமா?

### கூட்டணி அமைப்பது குறித்து கருத்து

சென்னை, நவ. 9—

அடுத்துவரும் நகராட்சித் தேர்தல்கள் குறித்து முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார் :—

"நகராட்சித் தேர்தல்களைச் கட்சிச் சார்பற்ற முறையிலும், கட்சி அடிப்படையிலும், இரண்டுவிதமாகவும் நடத்தலாம்.

இந்தத் தேர்தல்களை, 'கட்சிச் சார்பற்ற அடிப்படையில் நடத்த வேண்டும்' என்று நான் சில நாட்களுக்குமுன் சொன்னேன்; அதற்கு, காங்கிரசுத் தரப்பிலிருந்து இதுவரையில் பதில் இல்லை ; 'இதைப்பற்றி யோசிக்க இன்னும் நிறைய அவகாசம் இருக்கிறது' என்று காமராசர் சொன்னதாகத் தெரிகிறது.

"கட்சி அடிப்படையில் நகராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதென்றால், கூட்டணியைச் சேர்ந்த மற்றக் கட்சிகளுடன் தி. மு. கழகம் பேச்சு நடத்தி ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டியிருக்கும். இப்போதுள்ள கூட்டணி ஏற்பாட்டை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை. அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் நோக்கத்துடன் கூட்டணி ஏற்படவில்லை.

"எதிர்க் கட்சிகள் தமக்குள் போட்டியிட்டு, அதனால் காங்கிரசு பயனடையும்படி விடக் கூடாது—என்ற உறுதியின் அடிப்படையில் அமைந்தது கூட்டணி. பதவிப் பங்கிடு குறித்து பேரம் எதுவும் நடக்கவில்லை. கூட்டணியில் உள்ள மற்றக் கட்சிகள் தி. மு. க.-வுக்கு முழு ஆதரவு அளித்தன ; அதற்கு எமது நன்றி.

"எனது கொள்கைகளில் எல்லாத் துறைத் தலைவர்களும் வழிகாட்டி உதவுவதை நான் எப்போதுமே விரும்புகிறேன். நான் எல்லாம் தெரிந்தவன் என்றோ, குறைபாடுகளே இல்லாதவன் என்றோ சொல்லிக் கொள்ளவில்லை.''

## ஆட்சிக் காலமல்ல-- ஆயுட் காலமே முக்கியம்!

### கேரள முதல்வர் ஆசை!

"ஐந்து ஆண்டு அல்லது பத்து ஆண்டுகளுக்கு ஆட்சியில் நீடிப்பேனா என்பதைவிட, இன்னும் ஒரு ஐந்து அல்லது பத்து ஆண்டு உயிருடன் இருப்பதிலேயே நான் அக்கறை காட்ட விரும்புகிறேன்''

என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு கூறியிருக்கிறார்.

"உங்கள் நிர்வாகம் ஐந்து ஆண்டுகளும் நீடிக்குமா ?'' என்று பத்திரிகையாளர் கூட்டமொன்றில் வினவிய நிருபருக்குப் பதிலளிக்கும்போதே நம்பூதிரிபாடு மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

## மருத்துவமனையில் எம். சண்முகம்

சென்னை, நவ. 9—

விழுப்புரம் தொகுதி கழகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். சண்முகம் உடல்நலக் குறைவினால் சென்னை தலைமை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மருத்துவமனையில் ம.பொ. சிவஞானம்

சென்னை, நவ. 9—

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள் குடல் புண் காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டுத் தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக- திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை [illegible]) [illegible]

## காதில் விழுந்தது!

**ஒரு காங்கிரசுக்காரர்:**

"தலைவர் ஏன் இப்படிப் புதுடில்லிக்குப் போவதும்—சென்னைக்குத் திரும்புவதுமாக இருக்கிறார்?''

**மற்றொரு காங்கிரசுக்காரர்:**

"எங்கும் நிரந்தரமாக இருக்க முடியவில்லை ; அதனால்தான், இங்கும் அங்குமாகப் போய்வந்துகொண்டிருக்கிறார் !''

**முதலாமவர்:**

"அது சரி ; தென் சென்னையைப்பற்றி வாயைத் திறக்காமலேயே போய்விட்டாரே, ஏன் ?''

**இரண்டாமவர்:**

"வாயை மூடிக்கொண்டிருந்தாலாவது, முடிவு ஒரு மாதிரியாக இருந்தாலும் இருந்திருக்கும் ; ஆனால் அவர்தான்முன்பே திறந்துவிட்டாரே ! எனவே, இப்போது மூடிய வாயுடன் போய்விட்டார் !''

## சென்னையில் மீண்டும்தீவிபத்துக்கள்

### மூன்று காங்கிரசுக்காரர்கள் கைது

சென்னை, நவ. 10—

ரூ. 48,000 மதிப்புள்ள பொருட்களைச் சேதமாக்கி சுமார் 57 குடிசைகளைச் சாம்பலாக்கியிருக்கிறது நேற்று எழும்பூர் பூபதி நகரில் நடந்த தீ விபத்து !

அடையாறு விநாயகம் தோட்டத்தில் நேற்று மாலையே மற்றொரு தீ விபத்து நடைபெற்றிருப்பதன் மூலம் இரண்டு குடிசைகள் எரிந்திருக்கின்றன. சேதமாகியுள்ள சொத்தின் மதிப்பு ரூ. 200.

செய்தி கிடைத்து தீ விபத்து ஏற்பட்ட இடத்துக்கு விரைந்த மயிலைப் போலீசார் இது தொடர்பாக 3 நபர்களைக் கைது செய்தனர்.

காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் பெயர் விவரம் வருமாறு:—

டி. எல்லப்பன் (89-வது வட்டக் காங்கிரசுக் கமிட்டித் தலைவர்), கணேசன் (செயலாளர், காமராஜ் தேசிய ஊழியர் சங்கம், 89-வது வட்டம்), சின்னசாமி (89-வது வட்ட தேசிய ஊழியர் சங்க உறுப்பினர்).

## பொதுத் தேர்தலில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வாக்குகள் பதிவாகியிருக்கின்றன என்பது சாதாரணமானதல்ல. அந்த அளவுக்கு இந்த இடைத் தேர்தலில் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளன.

எந்த ஒரு வாக்குச் சாவடியிலும் கழகத்தைவிடக் காங்கிரசு அதிக வாக்குகள் பெறாததிலிருந்து எல்லாப் பகுதியினரிடமிருந்தும் கழகத்திற்கு ஆதரவு கிடைத்திருக்கிறது என்பது புலனாகிறது.

குறிப்பாக சைதாப்பேட்டை, எழும்பூர், திருவல்லிக்கேணி ஆகிய பகுதிகளில் இந்த இடைத் தேர்தலில் கழகத்திற்கு அதிக வாக்குகள் கிடைத்துள்ளன.''

### அமைதியும் ஒழுங்கும்

தேர்தல் அமைதியாக நடைபெற்றது குறித்து முதலமைச்சர் மகிழ்ச்சி தெரிவித்தார் ; ஆனால், காங்கிரசுப் பேச்சாளர்கள் பயன்படுத்திய ஆபாசமான — மிரட்டலான வார்த்தைகள் குறித்து வருத்தம் தெரிவித்தார்.

"இந்த இடைத் தேர்தலில், 'ஆட்சேபகரமான துண்டு வெளியீடுகளை வழங்கினர்' என்பதற்காக இரண்டு—மூன்று பேர்கள் தான் கைதுசெய்யப்பட்டனர் ; ஆனால், முன்பு காங்கிரசு ஆட்சியில் நடைபெற்ற தேர்தல்களில் 'கலவரம் செய்யக் கூடியவர்கள்' எனக் கூறி பலரைக் கைது செய்வதுண்டு ; இந்தத் 'தந்திர முறை'யைத் தி. மு. கழக அரசு பின்பற்றவில்லை''

என்றும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் சுட்டிக்காட்டி விளக்கினார்.

## மாறனுக்கு வெற்றிக்கணையாழி

சென்னை, நவ. 10—

நாடாளுமன்றத் தென் சென்னை இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற முரசொலி மாறன் அவர்களுக்கு, தஞ்சை தி. மு. கழகச் செயலாளர் எஸ். நடராசன், ஒன்றரை பவுன் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றைப் பரிசளித்தார்.

## இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. குழு கூட்டம்

"இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. குழுக் கூட்டம் 12—11—67 காலை 11-மணிக்கு, இராமநாதபுரம் சங்கர் விலாசத்தில் நடைபெறும்''

என்று மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு அறிவிக்கிறார்.

## இராஜாஜி -- அண்ணா சந்திப்பு

### கருணாநிதியுடன் சென்று மாலையணிவித்தார்

சென்னை, நவ 9—

இன்று காலை அறிஞர் அண்ணா அவர்களும், அமைச்சர் கருணாநிதி அவர்களும் இராஜாஜி அவர்களை—அவரது இல்லத்தில் சந்தித்து, மாலை அணிவித்தனர்.

இராஜாஜி அவர்கள், அண்ணா கருணாநிதி இருவருக்கும் மாலை அணிவித்து மகிழ்ச்சியும் வாழ்த்தும் தெரிவித்ததோடு, 'உங்கள் ஆட்சி வேரூன்றி நிலைத்துவிட்டது' என்பதற்கு இந்த வெற்றி அடையாளம்' என்று குறிப்பிட்டார்.

### காயிதே மில்லத்

அடுத்து குரோம்பேட்டையிலுள்ள காயிதே மில்லத் அவர்களை அண்ணா அவர்களும், கருணாநிதி அவர்களும் சந்தித்து மாலை அணிவித்தனர்.

தென் சென்னை இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற

## முரசொலி மாறனுக்கு பாராட்டு -- பொதுக்கூட்டம்

**14--11--67 மாலை 6 மணிக்கு**

**சென்னை -- திருவல்லிக்கேணி கடற்கரையில்**

தலைவர்: நிலநாராயணன்

பாராட்டுரை: **அறிஞர் அண்ணா**

மற்றும் பலர்

—சென்னை மாவட்ட தி.மு.க.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

**12--11--67**

**கோவை 2-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு டி. பி. எப். தெருவில்; பேசுவோர் : பெ. சீனிவாசன் எம்.ஏ.பி.எல்.,எம்.எல்.ஏ. சே. அ. இராசமாணிக்கம் எம்.சி., ப. கோபால், மு. இராமநாதன், சி. இராசன்.

**புதுக்கோட்டை**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு தெற்கு 3-ம் வீதியில் ; தலைவர் : அ. சிங்காரவேலு ; பேசுவோர் : அ. தியாகராசன், மு. இயலரசன். (முருகுபாண்டியனின் பல குரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**புதூர்**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு கடைத் தெருவில் ; தலைவா : எம். இரத்தினசபாபதி எம்.எல்.ஏ.; பேசுவோர் : எம். ஆர். சனார்த்தனம் பி.எஸ்சி., எஸ். சீத்தாராமலிங்கம் பி.எஸ்சி. எஸ். கலிங்கன், வி. எஸ். துரைராசு. (விளாத்திகுளம் தியாகக் குரல் கலா மன்றத்தின் 'கழகம் பிறந்தது நமக்காக' எனும் வில்லிசை நிகழ்ச்சி அரங்கேற்றப்படும்.)

**திண்டுக்கல்**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மவுன்ஸ்புரம் 2-வது சந்து திடலில் ; தலைவர் : ஐ. காசிம் ; பேசுவோர் : நெல்லை ர. சனார்த்தனம் பி.எஸ்சி., என். முத்து, பெ. சீவானந்தம்.

## தமிழகச் சட்ட மன்றம்

### நவ. 24-ம் நாள் கூடும்

சென்னை, நவ. 9—

தமிழகச் சட்டமன்றம் நவ. 24-ம் நாள்கூடும் ; 28-ம் நாள்வரை நீடிக்கும்.

விவசாய வருமான வரி திருத்த மசோதா, சுயமரியாதைத் திருமண மசோதா ஆகிய இரண்டும் இக்கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் முக்கிய மசோதாக்களாகும்.

**ரோஜா** பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

அமைச்சர்

## ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

நவ. 12 காலை 8-30 மணி : திருவண்ணாமலை ; மாலை 4 மணி : வேலூர் ; இரவு 10-45 மணி : காட்பாடி.

நவ. 13 காலை 7 மணி : ஏத்தாப்பூர் ; 8-30 மணி : வீராணம்—ஊராட்சியில் அறிஞர் அண்ணா படத் திறப்பு ; 9-30 மணி : மின்னாம்பள்ளி-ஊராட்சி வரவேற்பு; குடிநீர்த் தாங்கி திறப்பு விழா ; 10 மணி : மேட்டுப்பட்டி—உயர் நிலைப் பள்ளி வானொலிப் பெட்டி துவக்க விழா ; 11-மணி : சேசன்சாவடி—ஊராட்சி வரவேற்பு ; வனத்துறை நிலம் பார்வையிடல் ; பகல் 12 மணி : வெள்ளாளகுண்டம், ஜில்லாத்து வனத்துறை நிலம் பார்வையிடல் ; ஊராட்சி வரவேற்பு ; பிற்பகல் 1 மணி : வேப்பிலைப்பட்டி—ஊராட்சி வரவேற்பு ; 1-30 மணி : திருமானூர்—ஊராட்சி வரவேற்பு ; மேல்நிலை நீர்த்தொட்டி, ஆசிரியர் காலனி அடிக்கல் நாட்டு விழா ; 3-30 மணி : கம்மாளப்பட்டி—வனத்துறை நிலம் பார்வையிடல் ; ஊராட்சிமன்றக் கட்டிடத் திறப்பு ; மாலை 4-30 மணி : குரல்நத்தம்—வனத் துறை நிலம் பார்வையிடல் ; 7 மணி : பனைமரத்துப்பட்டி—ஊராட்சிமன்றம், உழவர்கள் வரவேற்பு.

அமைச்சர்

## சத்தியவாணிமுத்து

சுற்றுப்பயணம்

நவ. 11 மாலை 4 மணி : அரியலூர்—அரசினர் அரிசன நல விடுதி பார்வையிடல் ; 5 மணி : கள்ளக்குறிச்சி—அரசினர் அரிசன நல விடுதி பார்வையிடல் ; 6 மணி : சென்னிவனம்-இராயம்புரம் ஊராட்சி வரவேற்பு ; இரவு 7-30 மணி : மேலப்பாலுசூர்—பொதுக்கூட்டம் ; 8-30 மணி : அரியலூர்—பொதுக்கூட்டம்

நவ. 12 காலை 9 மணி : மதுரை—சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழாவைத் துவக்கி வைத்தல்.

நவ. 13 காலை 10-30மணி : சேலம்.

அமைச்சர்

## மா. முத்துச்சாமி

உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துச்சாமி அவர்கள், நவ. 11-ம் நாள் புறப்பட்டு நவ. 12-ம் நாள் நாமக்கல் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுவிட்டு மறுநாள் சென்னை திரும்புவார்.